[6th August 1966

பஞ்சாயத்து யூனியன்களில் தாய், சேய் நல விடுதிகள்

* 177 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா---

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை தாய், சேய் நல விடுதிகள் இன்றுவரை இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றில் முறையே அரசினர் கட்டடங்களிலும் மற்றக் கட்டடங்களிலும் இயங்கிவருபவை எத்தனை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சபைமுன் விவர அறிக்கை ª யொன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இதுபோல மருத்துவ மனைகள் பல வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போதிய வசதி இல்லாததால் கிராமப்புறங்களில் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. ஆகையால் மருத்துவ மனைகளுக்காக நிதியை ஒதுக்கிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தகுந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே கிராம மக்கள் அபிலாஷையுடன், ஆர்வத்துடன் வாடகைக் கட்டடங்கள் கொடுக்கிறார்கள். அதில் வைத்து நடத்தவேண்டுமென்று சொல்லி முன்வந்தால் அங்கே வைக்கப்படுகிறது. திட்ட அடிப்படையில் பொருளாதாரம் எவ்வளவு இடம் கொடுக்கிறதோ, அதற்குத் தக்கபடி சன்னஞ்சன்னமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன்.

கோரக்கேணி பஞ்சாயத்து

* 178 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோரக்கேணி பஞ்சாயத்தில் இருந்து பொன்னம்பூண்டியைத் தனிப் பஞ்சாயத்தாகப் பிரிக்கக் கோரி, பஞ்சாயத்துத் தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

(உ) நீண்டநாள் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) முதல் (உ) வரை. கோரக்கேணி பஞ்சாயத்து 10-6-1966-ம் தேதி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

ª 133–154-ம் பக்கத்தில் நாலாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஆனால், பஞ்சாயத்தைப் பிரிப்பதற்கான திட்டம் அரசினருக்கு இன்னும் வந்து சேரவில்லை. மாவட்ட அளவில் இவ்விஷயம் பரிசிலனையில் இருப்பதாகத் தெரிகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பே இரண்டு கிராமங்களை யும் தனிப் பஞ்சாயத்தாக பிரிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து சர்க்கார் அளவுக்கு பேப்பர் வந்துவிட்டது. தேர்தல் நடந்து முடிந்து விடட்டும், பிறகு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் வேறு கருத்தைச் சொன்னார்களே, பொன்னம்பூண்டியிலிருந்து இன்னும் மெம்பர்களே தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கோரக்கேணி பஞ்சாயத்தில் ஜூன் 1966-ல் தான் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. தீர்மானம் கலெக்டருக்குப் போயிருக்கிறது. சர்க்காருக்கு வந்தாலும் பொதுத் தேர்தலுக்கு முன் மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

Srirangam Municipality

* 179 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to merge Srirangam Municipality with Tiruchirappalli Municipality?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதைப்போல் யோசனை எதுவும் இல்லை.

திரு. வை. சங்கரன் : சார், ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டிக்குச் செலவு ரூ. 5 லட்சத்துக்கு மேல் ஆகிறது, அதற்கு வேண்டிய வருவாய் இல்லை என்று அறிகிறேன். திருச்சி மாநகர் திட்டம் தயாரிக்கும்போது இதையும் சேர்த்துத் தயாரித்தால் அனுகூலமாக இருக்கும் என்று அம்மாதிரிச் செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வருமானம் ரூ. 7,43,000 அளவுக்கு இருக்கிறது. 42,000 ஜனத்தொகை இருக்கிறது. தன்னுடைய நிர்வாகத்தைச் சீராக அமைத்துக்கொள்ளும் அளவில் நிர்வாகம் நன்றாக இருக்கிறது என்று இன்ஸ்பெக்டர்கள் அவ்வப்போது தகவல் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

திரு. ந. சுப்பிரமணியம் செட்டியார் : சபாநாயகர் அவர்களே, முனிசிபாலிட்டியால் எந்தவித வசதியும் செய்துகொள்ள முடிய வில்லை. அங்கு ஒரு பெரிய கோவில் இருக்கிறது, தேவஸ்தானம் இருக்கிறது. வருஷம் பூராவும் திருவிழா இருக்கிறது. சுகாதாரத் திற்காகச் செலவு செய்யக்கூட முடியவில்லை. கார்ப்பரேஷன் ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்னையைப்பற்றி கனம் முதல் அமைச்சர் முனிசிபல் பில்டிங் திறக்க வந்தபோது